# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திறனாய்வின் அடிப்படை நோக்கம் என்ன?
2. அறிஞர் தெயின் கூறும் இலக்கியப் பரப்பின் மூன்று பரிமாணங்கள் யாவை?
3. இலக்கிய மொழியை மொழியியல் துணைக்கொண்டு ஆராய்வது எங்ஙனம் வழக்கத்திலுள்ளது?
4. கலைகளின் வகைகள் யாவை?
5. ஓவியம் பேசாத கவிதை; கவிதை பேசுகிற ஓவியம் என்று கூறியவர் யார்?
6. விதிமுறைத் திறனாய்வின் பண்பு யாது?
7. ஒப்பீட்டுத் திறனாய்வின் கருதுகோள் ஒன்றினை எழுதுக.
8. உருவவியல் வரையறையை எழுதுக.
9. ஒப்பிலக்கியத்திற்கு அடிப்படை விதிமுறைகளைத் தந்தவர் யார்?
10. சரணாகதித் தத்துவ மரபைப் பின்பற்றியுள்ள புகழ் பெற்ற இலக்கியம் எது?
11. சிவஞான மாபாடியம் என்ற உரையை எழுதியவர் யார்?
12. அறுபத்து மூன்று நாயன்மார்களின் கதைகளைக் கூறும் இலக்கியத்தைக் குறிப்பிடுக.
13. தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி யார்?

14. இலக்கியத் திறனாய்வின் புதிய கோணம் எது?
15. உப்பு வயல் நாவலின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. திறனாய்வாளனுக்கு உள்ள சமூக உறவு என்ன?
2. வட்டார மொழி – சிறு குறிப்பு தருக.
3. செலுத்து நிலைத் திறனாய்வின் சிறப்புகளைக் கூறுக.
4. ஒப்பிலக்கியத்தின் இன்றைய நிலை குறித்து எழுதுக.
5. உளவியல் அணுகுமுறையின் வரையறையை எழுது.
6. இன்றைய திறனாய்வு தோன்றியதற்குரிய சூழ்நிலைகள் என்ன?
7. இருநிலை எதிர்வு என்றால் என்ன?
8. புலம்பெயர்வுப் பிரச்சனைகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) திறனாய்வாளனின் பண்புகள் – பணிகள் குறித்து கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) திறனாய்வு ஒரு கலையா? அல்லது அறிவியலா? விளக்கத்துடன் நிறுவுக.

2. (அ) திறனாய்வு வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தத்துவவியல் அணுகுமுறை குறித்து விளக்குக.

3. (அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் உரைகள் குறித்து தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மார்க்சியத் திறனாய்வுக் கொள்கைகளை விவரிக்க.

* * *